# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8073021

C

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 4/18 Date: நாள் 05.06.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15.05.18, 30.05.18, 31.05.18

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.06.18 Time : நேரம் 08.15 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓ தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 33 கி.மீ தென்மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தனி தாசில்தார் அலுவலகம். சமூக பாதுகாப்பு மற்றும் நல திட்டம், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. ஜோசப் செல்வராஜ் வயது 58 (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் ஆரோக்கியம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் கூலி (g) Address : முகவரி 2-280, மேற்குதெரு, மைக்கேல்பாளையம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சரவணன், தனி தாசில்தார், சமூக பாதுகாப்பு மற்றும் நல திட்டம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கிறேன்:திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 05.06.2018ம் தேதி காலை 08.15 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது A.ஜோசப் செல்வராஜ், வயது, 58/18, த/பெ. ஆரோக்கியம், 2-280, மேற்குத்தெரு, மைக்கேல்பாளையம். நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாரித்ததில் வாதியின் சகோதரி சேசம்மாள் விஷ பாம்பு கடித்து இறந்தது சம்மந்தமாக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் விபத்து நிவாரண உதவித் தொகை பெற, நிலக்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் வாதியிடம் லஞ்சமாக ரூ.15,000/- கேட்டதாக இருந்தது. மேற்படி புகாரின் நகலை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதின் பேரில் பூர்வாங்க விசாரணை PE.No.166/2018/Rev/DL, நாள்: 05.06.2018-ன்படி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் P.E.No.166/2018/REV/DL, நாள்:05.06.2018-ன்படி பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் செயலாக தலைமைக்காவலர் 1331 திரு.செந்தில்குமார் அவர்களை அனுப்பி நிலக்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் அலுவலகம் சென்று எதிரி திரு.சரவணன் அவர்களை சந்தித்து வாதியிடம் லஞ்சப்பணம் கேட்பது சம்மந்தமாக குரல் பதிவு செய்ய அனுப்பப்பட்டது. அதன்படி வாதி திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. ஜோசப்செல்வராஜ் 05/06/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.06.18
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் கெ. பேபி கிராணி
Rank: நிலை காவல்.....No. எண் ……….
ஆய்வாளர்.
ஊ.த. மற்றும் கண்காணிப்பு
பிரிவு, திண்டுக்கல்.

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:4/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

அலுவலகம் சென்று எதிரியை சந்தித்தபோது நடந்த உரையாடல்கள் குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் ரூ.15,000/- கேட்பது சம்மந்தமான வாதியின் புகார் மனுவின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு வாதி மற்றும் எதிரி ஆகியோர்களின் முன் நடத்தை பற்றியும் விசாரணை செய்தும், காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலை 05.06.2018ம் தேதி மதியம் 13.45 மணிக்கு பெற்றும், மேற்படி நிலக்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால் 05.06.2018ம் தேதி மதியம் 13.50 மணிக்கு திண்டுக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.4/2018, பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு அனுப்புனர் A.ஜோசப் செல்வராஜ், வயது, 58/18, த/பெ. ஆரோக்கியம், 2-280; மேற்குத்தெரு, மைக்கேல்பாளையம். நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல். பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்து வருகின்றேன். நான் மைக்கேல்பாளையத்தில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக சுமார் 8 ஆண்டுகள் பணிபுரிந்தேன். தற்போது கூலி வேலை செய்து வருகின்றேன். எனக்கு ஒரு பையன் மற்றும் ஒரு பெண் உள்ளனர். அவர்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது பெரியம்மா திருமதி.சிறுமணி அவர்களின் மகள் திருமதி.சேசம்மாள் என்பவரை J.மெட்டூர், ஜம்புதுரைக்கோட்டையைச் சேர்ந்த திரு.செல்லம் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவர்களுக்கு ஒரு பையன் மற்றும் இரண்டு பெண்கள் உள்ளனர். மேற்படி கிராமத்தில் அவர்களுக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளது. இந்நிலையில் கடந்த 29.01.2018ம் தேதி காலை அவர்களது விவசாய நிலத்தில் எனது சகோதரி சேசம்மாள் வேலை செய்து கொண்டு இருக்கும்போது ஏதோ ஒரு விஷ பாம்பு கடித்து விட்டதாக கத்தியுள்ளார். உடனே எனது மாமா திரு.செல்லம் மற்றும் அவரது மகனும் எனது சகோதரியை தூக்கிக்கொண்டு சென்று நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி அன்று காலை 09.30 மணியளவில் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.31/2018 என வழக்கு பதிவு செய்தனர். சகோதரி இறந்தது சம்மந்தமாக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் விபத்து நிவாரண உதவித் தொகை பெற கேட்டு எனது மாமா செல்லத்தின் பெயரில் ஒரு மனு ஒன்று தயார் செய்து அத்துடன் அவர்களது குடும்ப அட்டை எண்:22/G/0438029-ன் நகல், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பினருக்கான கணக்கெடுப்பு பதிவேடு எண்:1053 (ஜம்புதுரைக்கோட்டை கிராமம், நிலக்கோட்டை வட்டம்) நகல், எனது சகோதரி திருமதி.சேசம்மாள் இறப்புச்சான்று நகல், முதல் தகவல் அறிக்கையின் நகல், பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் நகல், ஆதார் அட்டையின் நகல், வாரிசு சான்றின் நகல் ஆகியவற்றை இணைத்து ஜம்புதுரைக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் சிபாரிசு கையொப்பம் பெற்றும் மற்றும் ஒருத்தட்டு வருவாய் ஆய்வாளரிடம் சிபாரிசு கையொப்பம் பெற்றும் நிலக்கோட்டை சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் என்பவரிடம் கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்தில் அவரது அலுவலகத்தில் கொடுத்தோம். எனது மாமா திரு.செல்லம் அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாத காரணத்தால் நான் தான் மனு தயார் செய்து அவருக்கு உதவியாக அவருடன் நிலக்கோட்டை சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் அலுவலகம்

சென்று மேற்படி மனு செய்தோம். பின்பு 15.05.2018ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு மேற்படி மனு தொடர்பாக எனது மாமா திரு.செல்லத்தை விசாரணைக்கு அழைத்ததின் பேரில் நானும் அவர் உடன் நிலக்கோட்டை சமூக பாதுகாப்புத் திட்ட அலுவலகம் சென்றேன். அங்கு எனது மாமாவிடம் விசாரணை செய்து வாக்கு மூலம் செய்து வாங்கி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அப்போது சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் எனது மாமாவிடம் உங்கள் மனு சம்பந்தமாக எனது அறிக்கையினை மேலே அனுப்பி உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன், அதற்கு ரூ.20,000/- பணம் கொடுங்கள் என்று கேட்டார். நான் உடனே இது கவர்மெண்ட்டுக்கு கட்டணுமா என்று கேட்டேன். அதற்கு சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள், உங்களுக்கு விவரமில்லை, உங்களுக்கு உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு எனக்காகும் செலவு என்று கூறினார். அப்போது நான், அவ்வளவு பணம் கொண்டுவரவில்லை என்று சொல்லி, பிறகு வருகிறோம் என்றுக் கூறி வந்துவிட்டோம். அப்போது எனது மாமாவின் வங்கிக் கணக்கு உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செம்பட்டி கிளையின் ஒரிஜினல் பாஸ் புத்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டார். பின்பு நானும் எனது மாமா செல்லமும் பணம் புரட்ட முயன்றோம், மேலும் எனது மாமாவிற்கு உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது. பணம் புரட்ட முடியவில்லை, அதனால் 30.05.2018ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நிலக்கோட்டை சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்களை அவரது அலுவலகத்திற்கு சென்று நானும் எனது மாமா திரு.செல்லமும் சந்தித்து உதவித் தொகை பெறுவது சம்மந்தமாக கேட்டபொழுது நான் கேட்ட பணம் ரூ20,000/- ரெடி பண்ணி கொண்டு வந்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு எனது மாமா திரு.செல்லம் அவர்கள் என்னால் அவ்வளவு பணம் ரெடிபண்ண முடியவில்லை. எனவே சிறிது குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டார். நானும் குறைத்துக்கொள்ளும்படி கேட்டேன். அதற்கு சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் நான் கேட்ட பணம் ரூ20,000/- கொடுக்காவிட்டால் உதவித் தொகை பெற முடியாது என்று கறாராக கூறிவிட்டார். பின்பு நானும் எனது மாமா திரு.செல்லமும் வீட்டிற்கு வந்து பணம் புரட்ட முயன்றும் முடியவில்லை. பின்பு எனது மாமா மேற்படி அலுவலகம் சென்று அதிகாரியிடம் திரும்ப குறைச்சு கேட்கலாம் என்று சொன்னதின் பேரில் நானும் எனது மாமாவும் மறுநாள் 31.05.2018ம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் நிலக்கோட்டை சமூக பாதுகாப்புத் திட்ட தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்களை அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்து உதவித் தொகை பெறுவது சம்மந்தமாக கேட்டபொழுது, அவர் நான் கேட்ட பணம் ரூ20,000/- கொண்டு வந்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு எனது மாமா அவ்வளவு பணம் புரட்ட முடியவில்லை என்றும், தனக்கு உடல்நலம் சரியில்லை, சிறிது குறைத்துக்கொள்ளுங்கள் என்று கெஞ்சியதின் பேரில் ரூ.5,000/- குறைத்து ரூ.15,000/- பதினைந்து ஆயிரம் ரெடிபண்ணி எனது அலுவலகத்திற்கு கொண்டு வருமாறு தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் கூறினார். அப்போது அவருடைய ஒரிஜினல் வங்கி கணக்குப் புத்தகத்தை தருமாறு தனித்தாசில்தார் அவர்களிடம் எனது மாமா கேட்டார். அதற்கு தனித்தாசில்தார் அவர்கள் வங்கி கணக்குப் புத்தகத்தை தா மறுத்துவிட்டார். பின்பு வந்து பணம் புரட்ட முயன்றோம், முடியவில்லை. இந்நிலையில் எனது மாமாவிற்கு உடல்நிலை மிகவும் மோசமாகி நடமாட முடியவில்லை. எனது மாமாவின் உடல்நலம் சம்மந்தமாக மருந்து செலவு செய்யவும் பணம் இல்லை. எனது மாமா மிகவும் வருத்தமடைந்து உதவித் தொகை பெறுவதற்கு தனது சிபாரிசினை செய்து பெற்றுத்தர ரூ.15,000/- லஞ்சமாக கேட்ட நிலக்கோட்டை தனித்தாசில்தார் திரு.சரவணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து உதவித் தொகை பெற விரும்பவில்லை, அதனால் தனித்தாசில்தார் மீது நடவடிக்கை எடுக்க கூறி என்னை திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்தில் புகார் மனு கொடுக்கச் சொன்னார். நான் புகார் மனுவினை

தயார் செய்து எனது மாமாவிடம் படித்துக் காண்பித்து அவர் முன்னிலையில் கையொப்பமிட்டேன். மேலும் தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-த்தை என்னிடம் எனது மாமா கொடுத்தார். எனவே நிலக்கோட்டை தனிதாசில்தார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இன்று 05.06.2018 காலை 8.15 மணிக்கு திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்திற்கு வந்து அந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். மேலும், நிலக்கோட்டை தனிதாசில்தார் திரு.சரவணன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன். இம்மனுவுடன் எனது மாமா உதவித் தொகை கேட்டு தனித் தாசில்தாரிடம் கொடுத்த விண்ணப்பத்துடன் இணைத்துக் கொடுத்த குடும்ப அட்டை எண்:22/G/0438029-ன் நகல், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பினருக்கான கணக்கெடுப்பு பதிவேடு எண்:1053(ஜம்புதுரைக்கோட்டை கிராமம், நிலக்கோட்டை வட்டம்) நகல், எனது சகோதரி திருமதி.சேசம்மாள் இறப்புச்சான்று நகல், முதல் தகவல் அறிக்கையின் நகல், பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல், வங்கி கணக்கு புத்தக்கத்தின் நகல், ஆதார் அட்டையின் நகல், வாரிசு சான்றின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- A.ஜோசப் செல்வராஜ், 05.06.2018, Sir, Received the complaint on 05.06.2018 at 08.15 hrs and the same was intimated to the Superintendent of Police, Southern Range, Chennai for necessary orders, Sd/- J.Rupa Geetharani, 05.06.2018, Inspector of Police, V&AC., Dindigul, As per the orders of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.166/2018/Rev/DL, dated:05.06.2018, a preliminary Enquiry was conducted regarding the complaint. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.04/2018, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 05.06.2018 at 13.50hrs. Sd/- J.Rupa Geetharani, 05.06.2018, Inspector, V&AC., Dindigul. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

J.Ru 05/06/18
Inspector of police
V&AC. Dindigul.